**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No.180/2018 | Date | : 11.03.2026 |
| Deposition of Witness for | : அ.சா.4 | Taluk | : |
| Name | : தொல்காப்பியன் | Calling | : |
| Father Name | : கிருஷ்ணன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.03.2026

(எதிரி ஆஜர் இல்லை, எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். எதிரியின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம், நாகரசம்பட்டி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 22.03.2018ம் தேதி காலை 08.30 மணிக்கு அறிவுசார் சொத்துரிமை அமலாக்க கோவைப்பிரிவு பொறுப்பில் இருந்தபோது, வாதி மணிகண்டராஜா, PREMIER கம்பெனியின் மேனேஜர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரினை பெற்றும், கோவை சொத்துரிமை அமலாக்க கோவைப்பிரிவு நிலைய குற்ற எண். 82/2018 சட்டப்பிரிவு 51 r/w 63(A) COPY RIGHT ACT and 420 IPC பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தும் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. பின்னர் சம்பவ இடமான 1369/1, ஜீவானந்தம் தெரு, எடீசியா இண்டஸ்டீரியல் எஸ்டேட் பகுதிக்கு மாலை 17.30 மணிக்கு சென்றும், சோதனை செய்வது குறித்து தனிக்கை நமூனா மூலம் மேற்படி தன்ரூபாராம் சௌத்ரி,

த/பெ.மெஹாராம்ஜி சௌத்ரிக்கு தெரிவித்தேன். **(தனிக்கை நமூனா அ.த.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு சோதனை செய்தததில் PREMIER கம்பெனி போலவே போலியாக Prashanth Premiar என்ற பெயரில் போலியான குக்கர்களை தயாரித்து விற்பனை செய்ய வைத்திருந்தது உறுதியானது. ஆகவே அங்கு இருந்த மேற்படி கம்பெனியின் உரிமையாளர் தன்ரூபாராம் சௌத்ரி என்பவரை விசாரிக்க அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டவரை வழக்கின் நிமித்தம் காரணமாக 19.00 மணிக்கு கைது செய்தேன்.

3. பின்னர் உடன் அழைத்துச்சென்ற தலைமை காவலர்கள் 1325 சிவக்குமார் மற்றும் 1319 குபேந்திரன் ஆகியோர் முன்னிலையில் மேற்படி எதிரியை அன்றைய தேதியிலேயே விசாரிக்க அவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அத்துடன் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் எடுத்து ஆஜர் செய்த போலியான 12லிட்டர் Prashanth Premiar – 23, 3லிட்டர் Prashanth Premiar – 57, 12லிட்டர் Prashanth Premiar குக்கரின் அடிபாகம் மட்டும் – 15, 5லிட்டர் Prashanth Premiar குக்கரின் அடிபாகம் மட்டும் – 15, Prashanth Premiar டை ஒரு செட் – 1, ஆகியவற்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றியும், சாட்சிகளை தனித்தனியாக விசாரித்தும், அவர்களது வாக்குமூலத்தை பதிவுசெய்தேன்.

4. பின்பு வழக்குச்சொத்து மற்றும் கைது செய்யப்பட்ட எதிரி தன்ரூபாராம் சௌத்ரி என்பவரை நிலையம் கொண்டு வந்தும், கைது குறித்து அவரது உறவினருக்கு முறைப்படி தெரிவித்தும், பின்னர் அடைப்புகாவல் அறிக்கை தயார் செய்தும், எதிரியையும், கைப்பற்றிய சொத்தையும் படிவம் 91 ன் மூலம் தக்க வழிக்காவலுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **(படிவம் 91 அ.த.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எனது புலன்விசாரணையின் போது புகார்தாரர் ஒப்படைத்த அவருடைய நிறுவனத்தின் காப்புரிமை மற்றும் எதிரியின் நிறுவனத்தின் காப்புரிமை ஆகியவற்றை பெற்றேன். **(புகார்தாரர் ஒப்படைத்த "PREMIER" காப்புரிமை அ.த.சா.ஆ. 9 ஆகவும், எதிரியின் Prashanth Premiar நிறுவனத்தின் காப்புரிமை அ.த.சா.ஆ. 10 ஆகவும்**

**குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பணிமாறுதலில் சென்றதால் வழக்கு கோப்புகளை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன்.

**குறுக்கு விசாரணை**

1. மேற்படி சம்பவத்தேதியில் நான் சேலத்தில் பணியாற்றினேன் என்றும் கோவைக்கு கூடுதல் பொறுப்பு வகித்தேன் என்றும் சொன்னால் சரிதான். புகார்தாரர் கோவை வருவதாக தெரிந்து நான் கோவை வந்தேன் என்றால் சரிதான். சென்னையில் இருந்து புகார்தாரர் வந்தாரா அல்லது புகார்தாரரிடமிருந்து புதிதாக புகார் பெறப்பட்டது என்றால் புகார்தாரரிடமிருந்து புதிதாக புகார் பெறப்பட்டது. சென்னையில் இருந்து எங்களுக்கு வந்த புகாரை நான் பரிசீலித்து மேற்படி புகார் சரியானபடி இல்லை என்று நான் புகார் தாரிடம் கூறி வேறொரு புகாரை கேட்டு பெற்றேன் என்றால் சரியல்ல.

2. புகார்தாரரின் நிறுவனமானது கூட்டாண்மை நிறுவனமா அல்லது தனிநபர் நிறுவனமா என்றால் தனிநபருக்கு சொந்தமானதாகும். PREMIER என்ற பெயரில் யார் காப்புரிமை வைத்திருக்கிறார்கள் என்பதை நான் பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன் சிவனேசன் என்பவரிடம் உள்ளது. அதற்கான ஆவணத்தை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். அதனை கைப்பற்றி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. புகார் தாரரை எவ்வளவு முறை விசாரித்தேன் என்றால் ஒரு முறை தான் விசாரித்தேன்.

3. புகார்தாரர் தன்னுடைய புகாரில் மேற்படி குக்கரை ஈரோட்டில் உள்ள கடையில் பார்த்ததாக தான் கூறியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்தில் சோதனையிடுவதற்கு நீதிமன்றத்தில் அனுமதி உத்தரவு பெறப்பட்டதா என்றால் இல்லை. எதிரியை நாங்கள் அழைத்து வரவழைத்தோம் என்றால் இல்லை அவர் அங்கு இருந்தார். அப்போது எதிரி எங்கிருந்தார் என்றால் நிறுவனத்தின் அலுவலகத்தில் இருந்தார். பூஜா இன்பக்ஸ் நிறுவனமானது தனிநபர் நிறுவனமா அல்லது கூட்டான்மை நிறுவனமா என்றால் அது எதிரிக்கு சொந்தமான தனிநபர் நிறுவனம் என்று எதிரி சொன்னார். அதற்கான ஆவணம் எதுவும் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை.

4. மேற்படி பூஜா இன்பக்ஸ் நிறுவனத்திற்கு எதிரி உரிமையாளர் இல்லையென்றால் சரியல்ல. மேற்படி அசல் குக்கரையும், போலி குக்கரையும் காண்பித்து அதற்கு இடையே உள்ள வித்தியாசத்தை புகார்தாரர் விளக்கினாரா என்றால் விளக்கினார். புகார்தாரரின் அசல் குக்கரை ஆஜர் படுத்தினாரா என்றால் ஆஜர் படுத்தினார் அதனை கைப்பற்றினோமா என்றால் இல்லை. புகார் பதிவு செய்தது, புலன் விசாரணை செய்தது, சொத்துக்களை கைப்பற்றியது மற்றும் எதிரியை கைது செய்தது அனைத்தும் சட்டவிரோதமானது என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.03.11 17:21:45 -0800

Judicial Magistrate No.III,

Erode.